2. தகவல் கோரல்

(அ) சாத்தான்குளம் தொகுதி, சின்னார்குளம், இடி மின்னல் தாக்கி இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாத்தான்குளம் தொகுதி, சின்னார்குளத்தைச் சார்ந்த திருமதி கோவில்பிள்ளை அம்மாள் மற்றும் ராமானுஜம்புதூர் ஊராட்சியைச் சார்ந்த திருமதி பகவதி அம்மாள் ஆகிய இரு பெண்களும் 8-4-2008 அன்று இடி தாக்கி மரணமடைந்துள்ளதால், அவர்களுடைய குடும்பத்தாருக்கு நிவாரணம் வழங்க வேண்டுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன் அவர்கள் பேரவை விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கின்றேன். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியிலுள்ள கருங்குளம் யூனியனில் சின்னார்குளத்தைச் சார்ந்த திருமதி கோவில்பிள்ளை அம்மாள், கணவரின் பெயர் தங்கவேல் நாடார், அந்த அம்மையாரின் வயது 68 மற்றும் ராமானுஜம்புதூர் ஊராட்சியைச் சார்ந்த திருமதி பகவதி அம்மாள், அவருடைய கணவரின் பெயர் பாலகிருஷ்ண கோனார், அம்மையாரின் வயது 52 ஆகிய இரண்டு பெண்களும் நேற்று காலை சின்னார்குளம் அருகிலுள்ள வயலில் கூலி வேலை பார்த்து வந்தார்கள். அப்போது திடீரென்று இடியுடன்கூடிய மழை பெய்தது. இதில் இடி தாக்கி, இந்த இரண்டு பெண்களும் அந்த இடத்திலேயே மரணமடைந்துவிட்டார்கள். கூலி வேலை செய்யும் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த இந்த இரண்டு குடும்பத்திற்கும் தக்க நிவாரணம் வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். இவர்களுடன் வேலை செய்துகொண்டிருந்த திருமதி லீலாவதி, வயது 39, திருமதி சங்கரம்மாள், வயது 40 மற்றும் 7 வயது சிறிய பையன் பால்துரை ஆகிய மூன்று பேரும் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இவர்களுக்கும் தக்க நிவாரணம் வழங்க வேண்டுமென்று பணிவோடுக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8-4-2008 அன்று சேரகுளம் பகுதியில், சின்னார்குளத்தில், தூத்துக்குடி மாவட்டத்தில், இடி மின்னல் தாக்கி, அதன் காரணமாக திருமதி பகவதி அம்மாள், திருமதி கோவில்பிள்ளை அம்மாள் ஆகிய இருவரும் பலியானார்கள் என்ற செய்தி, ஆழ்ந்த துயரத்திற்குரிய செய்தியாகும். சேரகுளம், மஜரா சின்னார்குளம் என்ற இடத்தில் 8 ஆம் தேதியன்று பிற்பகல் 12-30 மணிக்கு மாடு மேய்த்துக் கொண்டிருந்த இந்த இரண்டு பேரும் இடி மின்னலுக்கு ஆட்பட்டு இறந்துவிட்டார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக செய்தி கிடைக்கப் பெற்றிருக்கிறது. திருமதி பகவதி அம்மையார் அவர்கள் பாலகிருஷ்ண கோனார் என்பவருடைய துணைவியாராவார்கள். திருமதி கோவில்பிள்ளை அம்மாள் என்பவர் தங்கவேல் நாடார் என்பவருடைய துணைவியாராவார். இவர்களைத் தவிர, திருமதி சங்கரம்மாள், 40 வயதுடையவர், காயமுற்றிருக்கிறார். திருமதி லீலாவதி, 39 வயதுடையவர், அவரும் காயமுற்றிருக்கிறார். பால்துரை என்ற சின்னஞ்சிறு பையன், அவரும் இடி தாக்கி மிகுந்த காயத்திற்குள்ளாகியிருக்கிறார். இடி, மின்னல் தாக்கி இறந்துபோன நபர்களுடைய குடும்பத்தாரின் துயரைத் துடைக்கும் வகையில் பிரேதப் பரிசோதனை அறிக்கை, முதல் தகவல் அறிக்கை, வாரிசு சான்று, இவைகளையெல்லாம் பெற்று வாரிசுதாரர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, அரசின் சார்பாக ஆணை பிறப்பித்திருப்பதோடு, பகவதி அம்மாள் குடும்பத்திற்கும், கோவில்பிள்ளை அம்மாள் குடும்பத்திற்கும், தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காயமுற்ற சங்கரம்மாள், லீலாவதி, பால்துரை இவர்கள் சிகிச்சைக்கு ஆகின்ற மொத்தச் செலவையும், மாவட்ட ஆட்சித் தலைவருடைய மேற்பார்வையில் அரசு ஏற்றுக்கொள்ள இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய நிதி உதவிக்கு அவர்களின் குடும்பத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் பணிவான நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.